# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## OS.No.2/2023

PW1–ராஜேந்திரன் நாள்.09.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

வா.சா.ஆ.29 உயில் ஆவணம் எழுதப்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. அந்த ஆவணத்தை எப்போது எழுதினார்கள் மற்றும் யார்யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. உயிலில் கண்ட சொத்து பொன்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.29 உயிலை பொன்னம்மாள் எழுதிவைக்கவில்லை என்றும், அது பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொன்னம்மாள் இறந்துவிட்டார். அவர் இறந்துவிட்டார் என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.31 வாரிசு சான்றை நான் பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டில் இருந்ததை எடுத்து தாக்கல் செய்தேன். அதில் பெறுநர் விவரத்தில் என்னுடைய பெயர் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.31 வாரிசு சான்றை நான் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து பெற்றேன் என்றால் ஞாபகமில்லை. என்அப்பாவுக்கு நான், ராமச்சந்திரன், சரவணன் தவிர இரண்டு சகோதரிகளான பெரியம்மாள், பவுனம்மாள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி சகோதரிகளை வா.சா.ஆ.31 வாரிசு சான்றில் என்அப்பாவின் வாரிசுகளாக காட்டவில்லை என்றால் சரிதான். அவர்கள் ஏற்கனவே திருமணமாகி போய்விட்டார்கள். அவர்கள் திருமணமாகி சென்றாலும் வாரிசுகள் தான் என்றால் சரியல்ல. நான் அரசாங்க அதிகாரிகளை தவறாக வழிநடத்தி வா.சா.ஆ.31 வாரிசு சான்று பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.33 உயில் எழுதப்பட்ட விவரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.33 ஆவணத்தில் யார் வாசகம் சொன்னார், யார் எழுதினார், யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. பூபதி மற்றும்

சரவணன் என்பவர்கள் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று தெரியும். என்மகன் வீட்டில் வைத்து எழுதியதாக சொன்னார்கள். வா.சா.ஆ.33 உயிலை நான் தான் முன்னின்று தயாரித்தேன் என்றால் சரியல்ல. என்அம்மா ரேகை தான் வைப்பார். என்அம்மா பிரதிவாதி கமலாவதியுடன் தங்கியிருந்து அவரிடமிருந்து அழைத்துசென்ற பின்னர் வா.சா.ஆ.33 உயில் ஏற்பட்டதா என்றால் என்அம்மா பொதுவீட்டில் இருந்தார். என்அம்மாவை அழைத்துசெல்லும்போது உடல்நிலை சரியில்லாமலும், கால்உடைந்த நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. நான் என்அம்மாவை அழைத்துசெல்லவில்லை. என்சகோதரி பவுனம்மாள் போய் என்வீட்டிற்கு என்அம்மாவை அழைத்துவந்தார். என்அம்மா இறப்பதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு என்சகோதரி அழைத்துவந்தார் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. என்அம்மாவை அழைத்து செல்லும்போது நல்ல சுயநினைவுடன் இல்லை என்றால் சரியல்ல. உயிலில் கண்ட சொத்துக்கு என்அம்மா பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டிருந்து என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என்மகன் வீட்டிற்கும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் இடையே சுமார் 1கி.மீ தூரம் இருக்கும். என்வீட்டிற்கும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் என்வீடு தனியாக இல்லை, என்மகன் வீட்டில் இருக்கிறேன். என்அம்மாவிற்கு செப்டம்பர் 2021 மாதத்தில் மனநிலை பாதிக்கப்பட்டு தன்னை தானே புரிந்து கொள்ளும் நிலமையில் இல்லாமல் திருச்சியில் உள்ள ஆத்மா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. அதற்கான ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரியல்ல. டிசம்பர் 2021 மாதத்தில் என்அம்மா மனநிலை பாதிக்கப்பட்டு வழிதவறி மங்களமேடு அருகில் சென்றுவிட்டார் என்றால் அப்போது நான் வெளியூரில் இருந்தேன் எனக்கு தெரியவில்லை. வாடகை வாங்குவதற்காக குரும்பலூர் செல்வதற்காக மாற்றி மங்களமேடு செல்லும்பேருந்தில் அவரை ஏற்றிவிட்டுள்ளார்கள். அவரை திருமாந்துறை சுங்கச்சாவடி அருகே போலிசார் கண்டுபிடித்து அழைத்துவந்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை.

அவ்வாறு போலிசார் அழைத்து வந்து நேரடியாக என்வீட்டில் விட்டார்கள் என்றால் சரியல்ல. தினத்தந்தி நாளிதழில் இதுகுறித்து 06.12.2021ம் என்னிடம் காட்டப்படும் செய்தி வந்துள்ளது என்றால் அந்த செய்தி தாளில் என்அம்மாவின் போட்டோ ஆகும். வா.சா.ஆ.33 ஆவணம் ஏற்பட்டதாக சொல்லும் தேதியில் என்அம்மா தன்னைத்தானே புரிந்துகொள்ளும் நிலைமையில் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.33 ஆவணத்தை என்அம்மா நல்ல மனநிலையில் சுயநினைவோடு எழுதிகொடுக்கவில்லை என்றும், அதை நான் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் என்அம்மா நல்ல சுயநினைவோடு வா.சா.ஆ.33 ஆவணத்தை எழுதிகொடுத்திருந்தால் அருகில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்துசென்று அது பதிவுசெய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. சாட்சி தானாக அப்போது கொரானா காலகட்டம் என்றும், தன்அம்மா வயதானவர் என்று கூறுகிறார். சிவக்குமார் என்ற மருத்துவர் எங்கள் வீட்டு மாடியில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.34 மருத்துவசான்றை நான் வேண்டுமென்றே மருத்துவரிடம் கேட்டுபெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.37 ஆவணத்தில் என்னுடைய சகோதரிகள் என்அம்மாவின் வாரிசுகளாக காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் பொய்யான ஆவணங்களை தயாரிப்பது வழக்கம் என்றும், அந்த அடிப்படையில் தாவா உயிலை தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. சுப்புலட்சுமி பெயரில் சொத்திற்கு வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். சுப்புலட்சுமிக்கும் மு.வ.எண்.49/2025ல் கண்ட தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. சம்மந்தமில்லாத சொத்திற்கு பொய்யாக உயில் ஆவணங்களை தயாரித்து பட்டா கேட்டதால் தான் வருவாய்துறையில் என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.33, வா.சா.ஆ.29 ஆவணங்கள் பொய்யனாது என்றும், நான் தாக்கல் செய்துள்ள மு.வ.எண்.49/2025 வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள

மு.வ.எண்.2/2023 மற்றும் 6/2025 வழக்குகள் நிலைக்கத்தக்கதல்ல என்றும் நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மற்ற பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.